பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 12 வியாழக்கிழமை 24.02.2022 கதிர் 111

### இனி இது ரகசியம் அல்ல!

செய்தித் தேடல் பண்பியல்பு தொடர்பாக ஆங்கிலத்தில் ஒரு சொல்லாடல் உண்டு. News nose என்பார்கள். ‘செய்தி மூக்கு’ என்பது அதன் நேரடி மொழி பெயர்ப்பு. செய்தியை மணந்து தேடிப் பிடிக்கும் இயல்பைத் தான் இப்படிச் சொல்வர். ☞2

# இன்றும் நான்கரை மணிநேரங்களுக்கு மின்வெட்டு!

நாடு முழுவதும் இன்றும் நான்கரை மணிநேர சுழற்சி முறை மின்வெட்டு அமுல்செய்யப்படவுள்ளது.

மின்னுற்பத்தி நிலையங்களில் மின்பிறப்பாக்கிகளை இயக்கத்தேவையானஎரிபொருள் இல்லாத காரணத்தைச் சுட்டிக் காட்டி இலங்கை மின்சார சபையால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க மின்வெட்டுக் கான அனுமதியை வழங்கியுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நாட்டை 11 வலயங்களாகப் பிரித்து இரண்டு கட்டங்களில் இவ்வாறு மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நேற்று அமுல் செய்யப்பட்டது போன்று A, B, C பிரிவுகளில் உள்ள பிரதேசங்களுக்கு இன்றும் 4 மணி நேரம் 40 நிமிடங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

ஏனைய (P, Q, R, S, T, U, V, W) பிரிவுகளில் உள்ள பிரதேசங்களுக்கு 4 மணி நேரம் 30 நிமிடங்கள் மின்வெட்டு ☞2

### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைப் போன்று

# பொருளாதார நெருக்கடியிலும் அரசியல் செய்வதை நிறுத்துக!

## ராஜபக்ஷ அரசிடம் சுமந்திரன் எம்.பி. வேண்டுகோள்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை வைத்து அரசியல் செய்ததைப் போன்று நாட்டின் பொருளாதார நிலைமைகளை வைத்தும் அரசியல் செய்ய வேண்டாம் என அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் சபையில் தெரிவித்தார். ☞10

## கலாசார நிலையத்தின் பணிப்பாளர் யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம்



இந்தியத் தூதரகத்தின் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி றிவான்ட் விக்ரம்சிங் நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக் கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது கலாநிதி றிவான்ட் விக்ரம் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

## பஸில் நாளை டில்லி பயணம்

### நிதி அமைச்சின் செயலரும் விஜயம்



நிதிஅமைச்சர்பஸில் ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சர் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல ஆகியோர் நாளை வெள்ளிக்கிழமை இந்தியா செல்லவுள்ளனர்.

இந்தியாவில் ☞10

## மூன்று தமிழ் அரசியல் கைதிகள் யாழ். சிறையில் உண்ணாவிரதம்



### ஆளுநர் அலுவலகம் முன்பாக உறவுகளும் உணவு தவிர்ப்பு

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவர் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அரசியல் கைதிகள் நேற்று ☞10

## ஒரு படகில் எல்லை தாண்டி வந்த ஒன்பது தமிழக மீனவர்கள் கைது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.24

இலங்கையின் காங்கேசன் துறை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் 9 தமிழக மீனவர்களை ஒரு விசைப் படகுடன் இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று இரவு கைது ☞10

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி யாழில் நேற்றும் கையெழுத்து வேட்டை



(எஸ்.நிதர்ஷன்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி யாழ்ப்பாணத்தில் நேற்றும் கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மல்லாகம் மற்றும் தெல்லிப்பழை பகுதிகளில் நேற்றுக் காலை இலங்கைத் தமிரசுக் கட்சியின் ☞2




## அத்தியாவசியப் பொருள்களை தட்டுப்பாடின்றி வழங்க முடிவு

### நிதி அமைச்சர் பஸில் தெரிவிப்பு

அத்தியாவசியப்பொருள்களைத்தட்டுப்பாடின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ☞2

## வைரவப்புளியங்குளத்தில் இளைஞர் குழு அட்டகாசம்; இருவர் வைத்தியசாலையில்

(வவுனியா நிருபர்)

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் இளைஞர் குழுவின் அட்டகாசத்தால் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏனையோருக்கு சாதாரணமாகப் படும் ஒரு விடயம், உரிய செய்தி மூக்குக் கொண்ட ஊடகவியலாளனுக்கு வேறு விதமாகத் தோன்றும். அந்த விடயத்துக்குள் ஏதோ ஒன்று புதைந்திருப்பதை அவனது செய்தி மூக்கு மோந்து விடும். மூக்கு வியர்க்கும் என்பார்களே...! அது தான்.

அப்படி ஒரு செய்தி பற்றிய விவரணம் இது. ஆனால் அதற்குள் ஆழமான விடயம் பொதிந்து கிடப்பதால் அது குறித்து நோக்குவது முக்கியமாகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் ஆங்கில, சிங்கள ஊடகங்களில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

"பௌத்த மத வழிபாட்டுத் தலங்களைப் பதிவு செய்யும் முறைமை இலகுவாகக் கப்படுகின்றது." – என்ற சாரப்பட்ட தலைப்பில் செய்தி வெளியானது.

இந்த விடயத்தில் பல்வேறு அங்கீகாரங்கள், அனுமதிகள் பெறப்பட வேண்டி இருக்கின்றயால், அவற்றை இலகுபடுத்தும்படி பௌத்த பிக்குகள் கேட்டமைக்கு இணங்க, அத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக பௌத்த சாசன, மத விவகார, கலாசார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார் என்று அச்செய்தி விவரித்தது.

மேலோட்டமாகப் பார்த்தால் இந்தச் செய்தியில் பெரிய ஆழமான விடயம் ஒன்றும் இல்லைத்தான்.

இந்தச் செய்தியை ஒட்டித் துருவிய போது மேலும் இரண்டு விடயங்கள் வெளிப்பட்டன. அவற்றையும் அமைச்சின் செயலாளரே தெரிவித்து இருந்தார்.

ஒன்று – இப்படி பௌத்த மத ஸ்தலங்களைப் பதிவு செய்வதில், அந்த ஸ்தலத்தோடு புராதன, தொல்பொருள் விடயங்கள், நிலங்கள், சின்னங்கள் சம்பந்தப்பட்டிருந்தால் சம்பந்தப்பட்ட மத ஸ்தலத்தின் தலைமை பிக்குவுடன் தொல்பொருள் திணைக்களம் கலந்துரையாடி முடிவெடுக்க வேண்டும் என்று பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கின்றது.

அடுத்தது – இந்த நடைமுறை ஆக பௌத்த ஸ்தலங்கள், வணக்க நிலையங்கள் சம்பந்தமானது மட்டுமே. பிற மத விடயங்களைப் பதிவு செய்யும் விடயத்தில் வழமையான கெடுபிடி முறைமை தொடரும்.

பௌத்த விவகார ஆலோசனைக் கவுன்ஸிலின் கூட்டத்தில் இது பற்றய தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டமையை அடுத்து அது குறித்துத் துருவிப் பார்த்தேன்.

பௌத்த விவகார ஆலோசனைக் கவுன்ஸில் கடந்த 18ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடியது.

அப்போது வடக்கு, கிழக்கில் பௌத்த ஸ்தலங்கள், மையங்கள் மூடிமறைக்கப்பட்டு, அவை ஆக்கிரமிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு வருகின்றன என்று பல பிக்குமார் மற்றும் பௌத்த – சிங்களத் தீவிரப் போக்குக்கொண்டோர் முழங்கியுள்ளனர்.

"அப்படி நாங்கள் வடக்கு, கிழக்கில் சுமார் ஆயிரத்து ஐந்நூறு ஸ்தலங்களை அடையாளம் கண்டு, குறிப்பிட்டு, அவற்றை பௌத்த ஸ்தலங்களாகப் பதிவு செய்து அறிவிக்கும் படி விண்ணப்பித்திருந்தோம். ஆனால் அவை தொடர்பில் பல வினாக்கள், சந்தேகங்களை எழுப்பி பலவற்றை நிராகரித்துள்ளார்கள். ஆக சுமார் முந்நூறு இடங்கள் பற்றிய விண்ணப்பங்கள்தான் பரிசீலிக்கத் தகுதியானவை என்று எடுத்துக் கொண்டுள்ளனர். அரச அதிகாரிகளின் இந்த 'சிவப்பு டேப்' போக்கால் வடக்கு கிழக்கில் மறைந்து போகப்பண்ணியுள்ள பௌத்த மத ஸ்தலங்களை மீட்டெடுத்து, பௌத்தத்தை நிலை நிறுத்தும் எமது முயற்சி பின்னடைவு கண்டுள்ளது. இது விடயத்தில் ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பி.பி. ஜயசுந்தரவிடம் பல தடவைகள் முறையிட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை." – என்று பௌத்த பிக்குகள் பலரும் சீறினராம்.

அதையடுத்தே, ஜனாதிபதியின் உத்தரவில் பௌத்த ஸ்தலங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையை எந்த விதக் கட்டுப்பாடுகளுமின்றி இலகுவாக்கும் விதிமுறை அறிமுகம் என்ற தீர்மானம் நடைமுறைக்கு வருகிறது என அறிய வந்தது.

இனிமேல், பௌத்த பிக்குமார் ஓரிடத்தைச் சுட்டி, அது பாரம்பரிய அல்லது பழைய பௌத்த ஸ்தலம் என்று குறிப்பிட்டு விண்ணப்பித்தால், பௌத்த சாசன அமைச்சு அதை ஏற்று, அங்கீகரித்து சான்றிதழ் வழங்கிவிடும். அதற்குப் பிறகு அது பௌத்த ஸ்தலமா என்பதை யாரும் சவாலுக்கு உட்படுத்த முடியாது.

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு எங்கும் பௌத்த மத ஸ்தலங்கள் வேரோடிப் பதிந்த மையங்கள் உள்ளன என்று காட்டி, தமிழர் தேசத்தின் தனித்துவத்தைச் சிதைத்தழிக்கும் மிகக் கொடூரமான – குரூரமான – சதித் திட்டமே இப்படிக் கட்டவிழ்கின்றது.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் திடீர், திடீரென சந்திக்குச் சந்தி புத்தர் சிலைகள் முளைக்கின்றமை போல, பல இடங்களும் இனிமேல் பௌத்த மத ஸ்தலங்களாகப் பதிவுகளுடன் உருவெடுக்கும்.

நமது ஊடகங்களும், அரசியல் தலைமைகளும் விசேடமாகக் கவனித்து, முக்கியத்துவம் கொடுத்து, விரைந்து கையாள வேண்டிய விவகாரம் இது.

பௌத்த – சிங்களப் பேரினவாத வெறிப்போக்கின் உச்சியில் நின்று மேலாதிக்கத் திமிரோடு செயற்படும் இந்த அதிகார பீடம் தமிழர் தேசியத்தை – தேசத்தை – சிதைத்தழிக்க எந்த எல்லைக்கும் செல்லக் கூடியது என்பதை நாம் மறக்கக் கூடாது.

யுத்தத்தில் உயிரிழந்தவர்கள் மாவீரர்களாகவோ அல்லது 'பயங்கரவாதிகளாகவே' இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் செத்தவர்களின் – மீளாத்துயில் கொள்வோரின் – முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட புதைகுழிகளை புல்டோஸர் கொண்டு சிதைத்தழித்த – மனித நாகரிகப் பண்பியல்பே இல்லாத – மிருகத்தனமான – வெறிப்போக்கை பின்பற்றும் ஓர் ஆட்சிப் பீடத்திடம் – அப்படி கல்லறைகளை நிர்மூலமாக்குவதை 'பௌத்தசீலமாக'ப் போற்றும் ஓர் அநாகரிகத்தரப்பிடம் – புத்தரின் பஞ்சசீலம் என்ற உயரிய போதனை நெறி சிக்கிச் சின்னாபின்னமாகிக் கிடப்பதுதான் வேதனையிலும் வேதனை.

– மின்னல் –

---

## வைரவப்புளியங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரியவருவதாவது,

வவுனியா, வைரவப்புளியங்குளம், வைரவர் கோவில் வீதியில் இளைஞர் குழு வீதியில் நின்று அடிதடியில் ஈடுபட்டது. பொதுமக்கள் செறிவாக வாழும் பகுதியாகவும், பல கல்வி நிலையங்கள் அமைந்துள்ள பகுதியாகவும் உள்ள இடத்திலேயே இந்த அட்டகாசம் இடம்பெற்றது.

பொல்லுகள், போத்தல்கள், கல்லுகள் கொண்டு குறித்த குழுவினர் தாக்குதலில் ஈடுபட்டனர் என்று நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலில் இரு இளைஞர்கள்



காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இளைஞர் குழுவின் அட்டகாசம் தொடர்பில் வவுனியாப் பொலிஸாருக்கு அப்பகுதியில் வசிப்பவர்கள் தெரிவித்த போதும் தாமதமாக வந்த பொலிஸார் கைகலப்பில் ஈடுபட்டவர்களை அவ்விடத்தில் இருந்து விரட்டிவிட்டுச் சென்றனர்.

இதேவேளை, வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் தொடர்ச்சியாக இளைஞர் குழுக்களின் அட்டகாசங்கள் இடம்பெறுகின்றன எனத் தெரிவித்து வரும் நிலையில், பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டபோதும், அவர்கள் சீராக அப்பகுதியில் கடமையில் இல்லாமை காரணமாகவே இந்த அசம்பாவிதங்கள் தொடர்கின்றன எனவும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (100)

---

## அத்தியாவசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

கிராம மட்டத்தில் குறைபாடுகளை ஆராய்ந்து தகவல்களைப் பெறுவதற்குப் பிரதேச செயலகங்களால் பொறிமுறையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக, நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அரச அதிகாரிகளுடனான விசேட சந்திப்பின்போதே நிதி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதேவேளை, அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் மண் பரிசோதனைக்குத் தேவையான இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இதன்போது கூறினார்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, ஆளுநர்கள், அமைச்சுக்கள், மாகாண மற்றும் மாவட்டச் செயலாளர்கள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இந்தக் கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய கையெழுத்து வேட்டையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான ச.சுகிர்தன், வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் எஸ்.சுகிர்தன், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

---

## இன்றும் நான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமுல்படுத்தப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

Director, Jaffna College Institute of Technology
Calls for the following courses

Civil Draughtperson (one year)
Minimum Qualification Passed G.C.E.(OL) with pass in Mathematics & English
Course leads to:
- Follow courses in level 5
- Register for drawings at local councils

Computer Certificate Courses
(3 - 4 months Part time)
- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer - (Page Maker, PhotoShop & CorelDraw)
- Web Designing (HTML, CSS, JAVA Script PHP, MYSQL)
- JAVA, C++ Programming

Foundation in Information Technology
(FIT) (6 months part time)
Pre degree course leads to Bachelor|s in Information Technology (BIT), University of Colombo.

Commencement in the 2nd week of March 2022
The Courses will be conducted at our Jaffna Centre too
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road, Jaffna.
For further details contact
Tel no: 0212250975021222382
Email: ejcitsltnet.lk.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வாய்ச்சவடால் உத்தரவுகள்

**எரிபொருள் பற்றாக்குறை நெருக்கடி, மின்வெட்டு ஆகியவை தொடர்பில் ஆராய்வதற்கான விசேட அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடந்து முடிந்திருக்கின்றது.**

**கூட்டத்தின் முடிவில், 'வெறும் கை முழம் போடுவது போல' ஜனாதிபதியின் வழிகாட்டல் அறிவிப்பு வெளிவந்திருக்கின்றது.**

**எரிபொருள் விலை அதிகரிப்புக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணங்கவில்லை என்றும் –**

**எரிபொருள்களை இறக்குவதற்குக் காத்திருக்கும் கப்பல்களுக்கான அந்நிய செலாவணிக் கொடுப்பனவுகளை வழங்குமாறு நிதி அமைச்சருக்கும், மத்திய வங்கி ஆளுநருக்கும், ஏனைய அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி உரிய பணிப்புரை வழங்கியிருக்கின்றார் என்றும் –**

**மின்வெட்டு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும்படி ஜனாதிபதி வழிகாட்டல் விடுத்திருக்கின்றார் என்றும் –**

**இந்த அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் தகவல் வெளியிடப்பட்டிருக்கின்றது.**

**ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்த வழிகாட்டல்கள், பணிப்புரைகள், உத்தரவுகள் எல்லாம் செயல்படுத்தப்படக் கூடியவையா, செயல்படுத்தப்படுமா என்பதுதான் கேள்வி.**

**காரிய சாத்தியமான உத்தரவுகளை ஜனாதிபதி விடுத்திருக்கின்றாரா, அவை நடைமுறைப்படுத்தும் வாய்ப்புண்டா என்பவை சந்தேகத்துக்குரியவைதான்.**

**கடந்த மாதத்திலும் இது போன்ற ஒரு கூட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூட்டி, மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டாம், எப்படியும் தடையின்றி மின் விநியோகத்தை மேற்கொள்ளுங்கள் என்று உத்தரவு பிறப்பித்தார். அவரது இந்த உத்தரவு விலக்கிக் கொள்ளப்படாமலேயே, முதலில் தினசரி இரண்டு மணி நேரம் என ஆரம்பிக்கப்பட்ட மின்வெட்டு இப்போது பல பகுதிகளிலும் ஐந்து மணி நேரம் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.**

**உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை கடந்த ஏழு வருட காலத்தில் மிக உச்சமாக ஒரு பரலுக்கு 99 டொலர் என்ற அளவுக்கு உயர்ந்து விட்டமையால் உள்நாட்டிலும் எரிபொருள் விலை கணிசமாக உயர்வது தவிர்க்க முடியாதது என வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில்ல கூறுகின்றார்.**

**இதே காரணத்துக்காக எரிபொருள் விலை அதிகரிப்பு தவிர்க்க முடியாதது என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் டாக்டர் ரமேஷ் பத்திரணவும் கூறியிருந்தார்.**

**இந்த விலையில் எரிபொருளை இறக்குமதி செய்வதானால் மாதாந்தம் 50 கோடி அமெரிக்க டொலருக்கும் (சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாவுக்கும்) அதிக தொகை தேவைப்படும் என்ற தகவலை அமைச்சர் கம்மன்பில்ல நினைவூட்டுகின்றார்.**

**நாட்டின் அந்நிய செலாவணிக் கையிருப்பு அடியோடு கரைந்து போன நிலையில் –**

**அந்நிய செலாவணியை ஈட்டும் வழிகள் எல்லாம் தடைப்பட்டு அடைபட்டுப் போயிருக்கும் சூழலில் –**

**எரிபொருள் இறக்குமதிக்கான அந்நிய செலவாணிக் கொடுப்பனவுகளை வழங்குங்கள் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்திருக்கும் உத்தரவு செயற்படுத்த சாத்தியமற்றது என்று சுட்டுகின்றன விடயமறிந்த சில வட்டாரங்கள்.**

**'மந்திரத்தில் மாங்காய் பறிப்பது போல' விந்தைப் பேச்சுக்களை ஜனாதிபதி கூறுகின்றார். தீர்வுக்கான சரியான வழியைக் காணாமல் வெறும் வாய்சவடால் உத்தரவுகளைப் பிறப்பித்து என்ன பயன்?**

**எரிபொருள் விலையைக் கூட்டாமல், அதற்குப் பற்றாக் குறையை – தட்டுப்பாட்டை – ஏற்படுத்தி, மின்வெட்டையும் மோசமாக நடைமுறைப்படுத்தும் கைங்கரியம் தான் கடைசியில் இடம்பெறும் போல தோன்றுகின்றது.**

# காணாமற்போனவர்கள் வரவில்லை என்றால் அவர்கள் உயிருடன் இல்லை என்றே அர்த்தம்

## ஞானாசார தேரர் இப்படி விளக்கம்



யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 13 ஆண்டுகள் ஆகின்றன. இதுவரை காலமாக காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள் வரவில்லை என்றால் அவர்கள் இல்லை என்று தானே அர்த்தம் என ஒரே நாடு - ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து தெரிவிக்கையில் -

காணாமல் போனோர் விடயங்களை நாம் வேறு விதமாகக் கையாள வேண்டும். யுத்தத்தில் இரண்டு தரப்பிலும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

அதேபோல் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்திலும் இரண்டுதரப்பிலும் காணாமல் போயுள்ளனர். ஆகவே, யுத்தம் முடிந்து நீண்ட காலமாகிவிட்டது. இப்போதும் இந்தப் பிரச்சினைகளை தோண்டிக்கொண்டிருக்க முடியாது.

காணாமல் போனோர் பற்றிய விவகாரம் பாரதூரமானதாக உள்ளது. நாம் வடக்கிற்கு சென்ற வேளையில் காணாமல் போனோரின் உறவுகள் வந்து எம்மைச் சந்தித்தனர். தமது பிள்ளைகளின் படங்களை வைத்துக் கொண்டு எம்மிடம் முறையிட்டனர்.

ஆனால் இதற்கு எம்மால் என்னதான் செய்ய முடியும். அரசாங்கம் நேரடியாக ஒரு பதிலை கூறும் வரையிலும் அவர்களின் கோரிக்கைகளும் முறைப்பாடுகளும் இருந்துகொண்டே இருக்கும். வடக்கிற்கு யார் சென்றாலும் அவர்கள் முறையிடுகின்றனர். இவர்கள் ஓர் அமைப்பாக செயற்படுகின்றனரா எனவும் எண்ணத் தோன்றுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் பரசிற்றமோல் தட்டுப்பாடு எதிர்வரும் நாள்களில் பூர்த்தியாகும்!

## சன்ன ஜயசுமன தெரிவிப்பு

ஒமிக்ரோன் தொற்று, டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல்களின் அச்சுறுத்தல்களின் காரணமாக கடந்த மூன்று வாரங்களில் பரசிட்டமோல் மாத்திரைகளுக்கான தேவை 275 வீதத்தால் அதிகரித்துள்ளதாக மருந்து உற்பத்தி வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம், ஓயாமடுவ பிரதேசத்தில் சுவசிறி புர மருத்துவ உற்பத்தி வலயத்தை நிர்மாணிப்பது தொடர்பாக மூன்று நிறுவனங்களுடன் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உலக சந்தையில் பரசிட்டமோல் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருள்களின் விலை அதிகரித்ததன் காரணமாக பெரும்பாலான நிறுவனங்கள் அவற்றை இறக்குமதி செய்வதைத் தவிர்த்து வருகின்றன.

இதனால் உள்ளூர் சந்தையில் பரசிட்டமோல் மாத்திரைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனவே தேவையான இருப்பிலுள்ள பரசிட்டமோல் மாத்திரைகளை அவற்றின் அதிகபட்ச கொள்ளளவில் தயாரிப்பதற்கு மருந்து உற்பத்தி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் தினமும் 30 லட்சம் பரசிட்டமோல் மாத்திரைகளையும் தயாரித்து வருகின்றது.

எனவே பரசிட்டமோல் மாத்திரைகளின் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில் எதிர்வரும் சில நாள்களுக்குள் தட்டுப்பாடு பூர்த்தி செய்யப்படும். - என்றார்.

# தமது அரசியல் அதிகாரங்களை பலப்படுத்தமுயலும் அமைச்சர்கள்

## தேர்தல் கண்காணிப்பு அமைப்பு சுட்டிக்காட்டு

நாட்டில் உள்ள பல அமைச்சர்கள் தமது அரசியல் அதிகாரத்தைப் பலப்படுத்த முயல்கின்றனர் என்பது அவர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை அவதானிக்கும் போது தெளிவாகின்றது என தேர்தல் கண்காணிப்பு அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவிக்கையில் -

இவ்வாறு முரண்பாட்டுக்களை கொண்டு செயற்படுவது மக்களுக்குச் சிறந்த சேவை செய்வதற்கான நகர்வுகளை அடிப்படையாகக் கொண்டதல்ல.

அதேசமயம் தனிநபர்களின் அரசியல் நலன்களுக்காக சில விடயங்களைச் செய்வதைத் தவிர்த்து நாட்டினதும் மக்களதும் நலனுக்காக உழைக்க வேண்டியது அவசியம்.

அதுமட்டுமன்றி நாட்டில் அரசியல்வாதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையே கூட முரண்பாடுகள் காணப்படுகின்றன.


எனவே முரண்பாடுகளைத் தவிர்த்து அனைவரும் ஒன்றிணைந்து தேசத்தின் முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# மரக் கழிவுகளை துகள்களாக்கும் செயற்பாடு வவுனியா நகரசபையால் ஆரம்பித்து வைப்பு

வவுனியா நகரசபையால் நகரப் பகுதியில் காணப்படும மரக் கழிவுகளை துகள்களாக்கும் செயற்பாடு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இயற்கை பசளை உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் மரம் மற்றும் இலைகுலைகளைத் துகளாக்கும் இயந்திரம் அரசாங்கத்தால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது வவுனியா நகரசபைக்கு வழங்கப்பட்ட துகள்களாக்கும் இயந்திரத்தைக் கொண்டு வீதியோரங்களில் காணப்படும் மரக்கிளைகள், இலைகுலைகள்என்பவற்றை துகள்களாக்கி அகற்றும் நடிவடிக்கை நகரசபையால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இதனை வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன் மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர். (100)

காலைக்கதிர் Kalaikkathir

# “மற்றவர்களை அழகுப்படுத்திப் பார்ப்பது எனக்கு மிகவும் பிடிக்கும்”

## PB Beauty Parlour அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் தீபவேந்தினி கதிர்மலை நேர்காணலிது.



**» உங்களைப் பற்றிய அறிமுகம்**

என் பெயர் தீபவேந்தினி கதிரமாலை. நான் கிளிநொச்சியில் வசித்துவருகின்றேன். PB Beauty Parlour அழகுக்கலை அழகுக்கலை நிறுவனத்தை ஆரம்பித்து வெற்றிகரமாக நடாத்திவருகிறேன். அழகுக்கலைத்துறையென்பது எனக்கு மிகவும் பிடித்தமானதொன்று. அதிலும் மற்றவர்களை அழகுப்படுத்திப் பார்ப்பது இன்னும் பிடிக்கும். அவர்கள் மனம் மகிழும் போது எனக்கு மனதிருப்தி தோன்றும். எனது இந்த பயணம் தொடங்கி கிட்டதட்ட 2 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது. இந்த இரண்டு வருடங்களும் என் தொழிலுக்கு நேர்மையாகவும், முழுமையான ஈடுபாட்டோடும் செய்து வருகிறேன்.

**» அழகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?**

ஆரம்பத்தில் ஒரு பொழுதுபோக்கிற்காக சிறு சிறு அழகுக்கலைகளை கற்றுக்கொண்டு மற்றவர்களை அலங்கரித்து பார்க்கும் போது பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. அழகுக்கலைக்கும் எனக்கும் இடையே ஒரு அறியாத உறவொன்று இருப்பதை நான் உணர்ந்துகொண்டேன். அதிலும் எனக்கு அந்த திறமை நன்றாகவே இருக்கிறது என்பதையும் நான் அறிந்துகொண்டேன். பிறகு இதனை ஒரு தொழிலாக செய்தால் என்ன? என்ற ஒரு கேள்வி என் மனதிற்குள் எழுந்தது. அந்த கேள்விக்கு ஆரம்ப புள்ளியாக ஒரு அழகுக்கலை நிறுவனத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றவே எனது சொந்த அழகுக்கலை நிறுவனத்தை ஆரம்பித்தேன். இதனால் அழகுக்கலை மேல் இருந்த ஆர்வம் இன்னும் பலமடங்கானது. இதுவே என்னுடைய பல வெற்றிகளுக்கு அடித்தளமுமாகியது.

**» இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன?**

அழகுக் கலைத்துறையென்பது நான் விரும்பி தேர்ந்தெடுத்து செய்ததொன்று. ஆனால் என்னைப் பிடிக்காதவர்கள் என் தொழிலைப்பற்றி அவதூறாக கூறியுள்ளனர். கேலியும் கிண்டலுமாக என்னை எள்ளி நகையாடினார்கள். இவையெல்லாம் என்னை முடிக்கிப்போட்டுவிடும் பிழையான வார்த்தைகள் என்று எண்ணாமல் இது எனக்கான ஒரு சவாலாகவே நான் பார்க்கிறேன். எத்தனை பேர் எத்தனையாயிரம் கூறினாலும் நான் நேசித்த தொழிலை விட்டுவிடாமல் விடாமுயற்சியோடு செய்து என் இலக்கையும் எட்டியிருக்கிறேன்.

**» அழகுக்கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..**

அழகுக் கலைத்துறையில் எனக்கான வாய்ப்புகளை முதலில் நானே உருவாக்கிக் கொண்டேன். நான் ஒப்பனை செய்து அழகுபடுத்திய பெண்களை வைத்து புகைப்படங்கள் எடுத்து பிரசித்திபெற்ற புகைப்பட நிறுவனங்களுக்கு சமர்ப்பித்து வாய்ப்புகள் பலவற்றை தேடிக்கொண்டேன். ஆனால் தற்போது புகைப்படநிறுவனங்கள் தாமாகவே வந்து புகைப்படம் எடுப்பதற்கு மொடல்களை அலங்கரித்து தருமாறு கேட்கின்றனர். இதை நான் எனக்கு கிடைத்த மிகப்பெரும் வாய்ப்பாகவே கருதுகின்றேன். அதுமட்டுமன்றி அருந்ததி தனியார் நிறுவனத்தினால் பிரம்மாண்டமாக நடைபெற்று வரும் மாற்று மோதிரம் மணப்பெண் அலங்காரக் காட்சியில் என் திறமையை காட்ட எனக்கொரு வாய்ப்பும் கிடைத்திருக்கிறது.

அழகுக்கலைத் துறையை தேர்ந்தெடுத்து குறுகிய காலமேயென்றாலும் ஆரம்த் திலே நான் செய்த அலங்கார ஒப்பணைகளுக்கும் இப்போது நான் செய்யும் அலங்கார ஒப்பணைகளுக்கும் பெரும் வித்தியாசம் இருக்கிறது. கடந்த காலத்தில் நான் கற்றுக்கொண்டதை வைத்து ஒப்பணைகள் செய்துவந்தேன். இப்போது நிறைய அனுபவங்களோடும் ஆழமான தேடல்களின் மூலம் நான் கற்றுக்கொண்ட புதுவிடயங்களைக் கொண்டும் தற்போது ஒரு தொழிற்துறையில் தேர்ச்சிபெற்ற அழகுக்கலை நிபுணராக உருமாறியிருக்கிறேன். என்னைப் பொருத்தமட்டில் இதுகூட என் சாதனையொன்றாகவே நினைக்கிறேன்.. ஒரு பெண்ணாக நான் சாதிக்கவேண்டுமென்று நினைத்து செயற்பட்டதன் விளைவாகவே எனக்கு இந்த கௌரவம் கிடைத்தது.

**» சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.**

சில பெண்கள் சந்தரப்ப சூழ்நிலைகள் காரணமாக தன் வாழ்க்கையை தொலைத்து நிற்கின்றனர். ஒவ்வொரு பெண்களும் தனக்கு பிடித்த துறையை தேர்ந்தெடுக்கவேண்டும். பெண்கள் எதைப்பற்றியும் சிந்திக்காமல் தன்னுடைய துறையில் ஆர்வத்தோடு செயற்படவேண்டும். தன்னுடைய சொந்த காலில் நிற்கவேண்டும் என்ற எண்ணம் ஒரு பெண்ணுக்குள் இருக்குமாயின் ஒவ்வொரு பெண்களும் சாதிக்கும் தைரியமுடையவர்களாகின்றனர். பெரியவர்களிடம் கருத்துக்களை கேளுங்கள். ஆனால் இறுதி முடிவை நீங்கள் தான் எடுக்கவேண்டும். யாரையும் நம்பி பெண்களாகிய நாங்கள் வாழத்தேவையில்லை. சுயமாகத்தொழில் செய்தாலே போதும் தலை நிமிர்ந்து நிற்கலாம்.






காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்றாக நீங்கும் சாதகமில்லை!

## திருத்தத்தில் பல சாதகங்கள் உள்ளன; அவை சிறந்தன என்கிறார் கே.வி.தவராசா



அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் திருத்தப்பட்ட வரைவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கால் தற்போது சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நெருக்கடிக்குள் தள்ளப்படுவார்கள் என சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வழக்கு வெற்றிபெறும் பட்சத்தில், கடந்த காலத்தில் இருந்த மிக மோசமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்தொடரும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரான சட்டத்தரணி தவராசா குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத தடுப்புச்சட்டம் முற்றாக நீக்கப்படும் என அனைவரும் எதிர்பார்க்கிறார்கள் எனவும், எனினும் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கான சூழல் இல்லாத நிலையில், திருத்தத்தில் காணப்படும் சாதகமான அம்சங்கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டுமென சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார். 42 ஆண்டுகால பயங்கரவாத தடுப்புச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை எனவும், என்ன காரணத்துக்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதோ அது 2009 இல் முடிவடைந்தும் இது நீக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சட்டத்தில் திருத்தங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், இது அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது எனவும் அரசமைப்பிற்கு முரணானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச ஒருமித்த கருத்துக்கும் அரசமைப்பின் பல விதிகளுக்கும் முரணான இந்தச் சட்டத்தை இந்த அரசு சுயநலத்துக்காகப் பயன்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழலில் இப்போது தமிழ் பேசும் இனத்துக்கு எதிராக பாயும் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை நீக்கக் கோரி நடைபெற்று வரும் கையெழுத்துப் போராட்டம் வரவேற்கத்தக்கது எனவும், எனினும் தற்போதைய சூழலில் இந்தச் சட்டம் மீளப்பெறப்படுமா என்பது கேள்விக்குறியே எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த திருத்தத்தின் ஊடாகத் தடுப்புக் காவல் காலம் 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ள விடயத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு சட்டமா அதிபரின் அனுமதியுடன் மாத்திரமே நீதிமன்றப் பிணையை பெற்றுக் கொள்ள முடியும் எனவும், எனினும் தற்போதைய திருத்தத்தின் படி மேல் நீதிமன்றத்திற்கும், மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் பிணை வழங்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கடல் ஆய்வில் ஈடுபடும் அமெரிக்க பிரஜையின் உடைமைகள் குருநகரில் களவாடப்பட்டன!

கடல் ஆய்வில் ஈடுபட்டு வரும் அமெரிக்க பிரஜையின் உடைமைகள் சில குருநகர் கடற்பகுதியில் களவாடப்பட்டுள்ளன என யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க பிரஜை ஒருவர் இலங்கை கடற்பரப் பில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார், அதன் ஒரு கட்டமாக யாழ்ப்பாணத்துக்கு கொழும்பில் இருந்து கடந்த 19 ஆம் திகதி சிறிய படகொன்றில் வந்துள்ளார்.

படகில் யாழ்ப்பாணம் வந்தவர் குருநகர் கடற் பகுதியில் தனது படகை நிறுத்தி விட்டு, தங்குவதற் காக யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் உள்ள நட்சத்திர விடுதிக்குச் சென்றுள்ளார்.

விடுதியில் தங்கி விட்டு மறுநாள் படகுக்குச் சென்ற போது, படகில் இருந்த சுழியோடி கண்ணாடிகள், பாதுகாப்பு அங்கிகள், கடல் ஆய்வு உபகரணங் கள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளமையை அவதானித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**

**35ஆவது பட்டமளிப்பு வைபவம்**

1. கலைமாணி
2. வணிகமாணி
3. வியாபார முகாமைத்துவமாணி
4. நடனமாணி
5. இசைமாணி

மேற்படி பட்டக் கற்கைநெறிகளில் 02.09.2017 இற்கு பின்பும் 23.01.2021 திகதிக்கு முன்பும் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கும் முகமாக பட்டமளிப்பு வைபவத்தினை **05.03.2022 (சனிக்கிழமை)** காலை 9.00 மணி தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டரங்கில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வைபவத்திற்கான பட்டஅங்கி மற்றும் நுழைவுச்சீட்டுகளை **26.02.2022 (சனிக்கிழமை)இ 27.02.2022 (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 28.02.2022 (திங்கட்கிழமை)** ஆகிய தினங்களில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.00 மணி வரை) திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் மாணவர் பதிவேட்டு புத்தகத்தினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளமுடியும். அத்துடன் இணையவழி மூலம் வேண்டுகோள் படிவத்தினை (Supplication Form) சமர்ப்பித்தவர்கள் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை சமர்ப்பித்தல் அவசியமானதாகும்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

இணையத்தள முகவரி : http://www.codl.jfn.ac.lk/

**பதிவாளர்**
**23.02.2022**

**University of Jaffna, Sri Lanka**

**WALK-IN-INTERVIEW**

A walk in interview for the post of **MECHANIC** on **daily paid** basis will be held on **09.03.2022 (Wednesday) at 9.30 a.m** at the Board Room of the University.

**Qualifications:**

i. Pass in the 8th Standard

ii. Should be conversant with

a. Reading scales, micrometres and recording fractional dimensions.

b. Specialized types of fitting of plant and machinery of steam, motor and diesel or the operation of workshop machinery such as lathes milling machines and shaping machines

**and**

c. Reading and understanding drawings,

iii. Not less than 2 years' experience as a Mechanic or Machine Operators.

Age: Applicants should be less than 40 years of age.

**Salary : Rs.1,923/= per day**

Candidates are requested to appear with relevant certificates, NIC and **self-prepared applications.**

**Registrar**
**University of Jaffna**
**21.02.2022**

காலைக்கதிர்
Kalaikkathir

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக விசாரணைகளை நடத்துக!

## ஐ.நா. ஆணையாளரிடம் உறவுகள் கோரிக்கை

தமது உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே பல்வேறு அச்சுறுத்தல்கள் மற்றும் இடையூறுகளுக்குமத்தியிலும்தொடர்ச்சியாகப்போராட்டத்தை மேற்கொண்டு வருவதாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுவரை போராடிய 112 பெற்றோர்கள் மன அழுத்தத்தாலும் நோய்வாய்ப்பட்டதாலும் மரணித்துள்ள நிலையிலும், நீதி கிடைக்க வேண்டும் என எஞ்சியிருப்பவர்கள் தொடர்ந்தும் போராடிவருகின்றனர் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆகவே, இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கக் கோரி, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கு அவர்கள் கடிதம் எழுதியுள்ளனர்.

உறவுகளைத் தேடி போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் இறப்புக் காரணமாக அவர்களின் உறவுகள் காணாமலாக்கப்பட்டமைக்கான சாட்சிகள், ஆதாரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன என்றும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தத் துன்பியல் நிலை தொடர்ந்தால் இறுதியில் சாட்சிகள் இன்மையால் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தை முடிவிற்குக் கொண்டுவருவது சிங்கள அரசுக்கு சுலபமாகிவிடும் என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட மிருசுவில் படுகொலையாளிக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்பட்டமை, திருகோணமலையில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவத்தில் இருந்து கரன்னகொட விடுவிக்கப்பட்



டமையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் இரவோடு இரவாக மத அடையாளங்கள் அழிக்கப்பட்டு விகாரைகள் அமைக்கப்படுகின்றமை, பூர்வீக நிலங்களை கையகப்படுத்துதல், போராட்டத்திற்கு முன்னிலை வகிப்பவர்கள் விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவது உள்ளிட்டவற்றையும் அதில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# உள்ளூர் மருந்துகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் மருத்துவ ஆய்வுகூடப் பயன்பாட்டுப் பொருள்களை கொள்வனவு செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சர்வதேச தரத்திற்கமைய எமது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்துவித மருந்துகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் மருத்துவ ஆய்வுகூடப் பயன்பாட்டுப் பொருள்களின் உற்பத்திகளை மேற்கொள்வது அரசாங்கத்தின் கொள்கையாகும்.

அதற்கமைய, இந்தப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக வெளிப்படையானதும் வினைத்திறனானதுமான பொறிமுறையை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பொறிமுறைக்கமைய எதிர்வரும் காலங்களில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மேற்படி பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகவும், சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# கொலை செய்து கூரையில் தொங்க விடுவேன் என மிரட்டிய வர்த்தகரை மன்னித்தார் கீதா குமாரசிங்க!

கொலை செய்து சடலத்தைக் கூரையில் தொங்க விடுவேன் என மிரட்டல் விடுத்த வர்த்தகர் ஒருவருக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க மன்னிப்பு வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கீதாவிற்கு கொலை மிரட்டல் விடுத்த நபரை ஊருகஸ்மங்ஹந்திய பிரதேசத்தில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எனினும், குறித்த சந்தேகநபரை மன்னிக்கிறேன் எனக் கூறி தனது பொலிஸ் முறைப்பாட்டை கீதா திரும்ப பெற்றுக் கொண்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

எல்பிட்டிய கொட்டகனத்தே என்னும் பகுதியைச் சேர்ந்த 60 வயதான வர்த்தகர் ஒருவரே, கீதாவின் வீட்டுக்குள் புகுந்து இவ்வாறு கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

கடன் தொகை ஒன்றை மீளச் செலுத்தத் தவறியதால் கீதா மீது கடும் கோபம் கொண்டு குறித்த வர்த்தகர் கொலை மிரட்டல் விடுத்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

எனினும் குறித்த கடன் தொகையைத் தாம் பெற்றுக்கொள்ளவில்லை எனவும், வறிய மக்களுக்கு வழங்கினேன் எனவும் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விளக்கத்துக்குச் செவிமடுக்காது கீதாவிற்குக் வர்த்தகர் கொலை மிரட்டல் விடுத்த காரணத்தால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடன் தொகை ஒன்றைக் கேட்டு வீடு புகுந்து கொலை மிரட்டல் விடுக்கும் காட்சிகள் சிசிடிவி காணொலிகளில் பதிவாகியுள்ளன என கீதா



குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும், வர்த்தகரின் மனைவியும், மகளும் வந்து கோரியதால் வர்த்தகருக்கு எதிரான முறைப்பாட்டை வாபஸ் பெற்றுக்கொண்டு அவரை மன்னித்து விட்டனேன் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மறுசீரமைக்கப்பட்டுள்ள 200 பஸ்கள் சேவைக்கு!

பழுதடைந்த நிலையில் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டிருந்த 200 பஸ்களை மறுசீரமைத்து மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளும் நிகழ்வு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் இடம்பெற்றது.

வாகன ஒழுங்குறுத்துகை, பஸ் போக்குவரத்துச் சேவைகள், ரயில் பெட்டிகள், மோட்டார் வாகனக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவின் யோசனைக்கமைய, போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் ஆலோசனையின் பேரில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டை அடுத்து, பஸ் கொள்வனவும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள பஸ் பற்றாக்குறை மற்றும் செலவுக் குறைப்பைக் கருத்திற்கொண்டு, பழுதடைந்த நிலையில் சேவையிலிருந்து நீக்கப்பட்ட பஸ்களைப் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் முதற்கட்டமாக, 273 பஸ்களை மறுசீரமைத்துச் சேவையில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை, 2020 டிசெம்பர் மாதத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இதன் இரண்டாம்கட்டத்தின்கீழ், பயன்பாட்டிலிருந்து முழுமையாக நீக்கப்பட்ட நிலையில் நாடு முழுவதிலுமுள்ள 107 டிப்போக்களில் காணப்பட்ட 200 பஸ்கள் புதுப்பிக்கப்பட்டன. இதற்காக, 13.6 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இலங்கைப் பொதுப் போக்குவரத்துச் சேவைச் சங்கத்தின் முழுமையான ஒத்துழைப்பின் கீழ், இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் லக்திவ பொறியியல் நிறுவனம் ஆகியன இணைந்து, இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்தன.

இந்த நிகழ்வின் போது, மறுசீரமைக்கப்பட்ட பஸ்களைக் கண்காணித்த ஜனாதிபதி, இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களுடனும் கலந்துரையாடி, அவர்களை ஊக்கப்படுத்தினார்.

போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, அமைச்சின் செயலாளர், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க ஆகியோர் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மாகாணங்களுக்கிடையிலான 250 தனியார் பஸ்கள் எரிபொருள் தட்டுப்பாட்டால் சேவை இடைநிறுத்தம்!

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மாகாணங்களுக்கிடையில் நாளாந்தம் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடும் 250 தனியார் பஸ் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என மாகாணங்களுக்கிடையிலான தனியார் பஸ் போக்குவரத்து சேவை சங்கத்தின் தலைவர் சரத் விஜித் குமார தெரிவித்தார்.

நாட்டில் தற்போது தோற்றம் பெற்றுள்ள எரிபொருள் பற்றாக்குறை காரணமாக தனியார் பஸ் உரிமையாளர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

மாகாணங்களுக்கிடையில் போக்குவரத்து சேவையில் ஈடுப்படும் பஸ்களை முழுமையாக சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலைமை தோற்றம் பெற்றுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் 3 ஆயிரத்து 200 தனியார் பஸ்களில் தற்போது 2 ஆயிரம் பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

எனவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண போக்குவரத்து அமைச்சு உரிய நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# உக்ரேன் - ரஷ்ய நாடுகளின் மோதல் இலங்கையை நேரடியாகப் பாதிக்கும்



## ரமேஷ் பத்திரண தெரிவிப்பு

உக்ரேன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையிலான மோதல் இலங்கையின் எரிபொருள் விலையேற்றத்தில் நேரடி தாக்கத்தை செலுத்தும். இதனால் நாட்டில் எரிபொருள் விலை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமுள்ளன என அமைச்சரவை இணைபேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

உக்ரேனின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள இரு பகுதிகளை இறையாண்மை மிக்க பிராந்தியங்களாக ரஷ்யா அங்கீகரித்துள்ளது.

கிழக்கு உக்ரேனில் கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகிய 2 பிராந்தியங்களையும் தனி நகரங்களாக, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அங்கீகரித்தார்.

இந்நிலையில் இந்த நிலைவரத்தின் காரணமாக இலங்கையின் வெளிநாட்டு பணப்பரிமாற்றல் மற்றும் எரிபொருள் என்பவற்றின் நேரடி பாதிப்புக்கள் ஏற்படுமா? இது தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு யாது என்று அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் ரமேஷ் பத்திரண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஊடகவியலாளர் அடக்குமுறை என்ற குற்றச்சாட்டு சுத்தப்பொய்!

## அது ஜெனிவாவுக்கான காய்நகர்த்தல் என்கிறார் வீரசேகர



ஜெனிவா கூட்டத்தொடர் நடைபெறவிருக்கும் நிலையில் எதிர்க்கட்சியினர் அரசாங்கத்துக்கு எதிராகப் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர் எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறை என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதன் மூலமாக ஜெனிவா கூட்டத்தொடரை இலக்கு வைத்தே எதிர்க்கட்சி காய் நகர்த்துகின்றது என்பது புலனாவதாக அவர் கூறினார்.

கருத்துச் சுதந்திரம் மீதான அடக்குமுறை மற்றும் ஊடகவியலாளர்களின் மீதான அச்சுறுத்தல் தொடர்பாக நாடாளுமன்றில் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த அரசாங்கமே யுத்தக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டு நாட்டைக் காட்டிகொடுத்தது என குற்றம் சாட்டிய சரத் வீரசேகர, இனிமேலும் இவ்வாறான கருத்துக்களை முன்வைக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

அண்மையில் ஊடகவியலாளர் சமுதித்தவின் வீட்டின் மீதான தாக்குதல் இடம்பெற்றபோது, அங்கு வந்து தாக்குதலை நடத்தியவர்கள் வெள்ளைவானில் வந்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொவிட் தொற்றாளர்கள் எண்ணிக்கை விரைவில் எகிறுமென ஹேமந்த ஆரூடம்

நாட்டில் தற்போது பதிவாகும் கொவிட் தொற்றாளர்களை விடவும் தொற்றால் உயிரிழப்போரின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகப் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொவிட் தொற்றால் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் 30 மற்றும் 60 வயதுக்கு இடைப்பட்டவர்கள். அதில் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் குறைந்தளவில் உயிரிழந்துள்ளனர்.

60 வயதுக்கு மேற்பட்ட பலர் நாள்பட்ட நோய்களைக் கொண்டுள்ளவர்கள். நீண்டகால நோயெதிர்ப்புத் தடுப்பு மருந்துகளைப் பயன்படுத்துபவர்கள் வீட்டில் பாதுகாப்பாக இருந்தாலும், ஆரோக்கியமாக இருப்பவர்கள் மூலம் நோய்த் தொற்றுக்குள்ளாகி அவர்கள் உயிரிழக்க நேரிடும்.

இந்த நிலைமையைத் தடுப்பதற்காக ஆரோக்கியமாக உள்ளவர்கள் சுகாதார பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன், அனைவரும் மூன்றாவது கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் நோய் பரவலைக் கட்டுப்படுத்த முடியும்.



சில நாடுகளில் ஒமிக்ரோன் திரிவு பரவலின் ஆரம்பத்தில், பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதால் அவற்றில் சில வளர்முக நாடுகளில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது.

இலங்கையில் தற்போது இவ்வாறானதொரு நிலைமை காணப்படாவிடினும், விரைவில் அவ்வாறானதொரு நிலைமையை எதிர்பார்க்கலாம். - இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# பொல்கஹவெல பிரதேச சபை உறுப்பினராகத் தேரர் ஒருவர்!

வணக்கத்திற்குரிய வல்கம அரியகித்தி தேரர் செவ்வாய்க்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் பொல்கஹவெல பிரதேச சபை உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பொல்கஹவெல கணுமலே தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்திய ஆர்.எம்.விஜேரத்னவின் மறைவை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் வகையில் வணக்கத்திற்குரிய வல்கம அரியகித்தி தேரர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்திலுள்ள பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே, நாடாளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் சரித்த ஹேரத், சமன்பிரிய ஹேரத், யூ.கே.சுமித் உடுகும்புர, வடமேல் மாகாணசபையின் தவிசாளர் டிகிரி அதிகாரி, பொல்கஹவெல பிரதேச சபை தவிசாளர் லிவேரா குணதிலக உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வைத்தியசாலையின் கவனவீனம் 9 மாத சிசு பரிதாபகரமாக சாவு!

## பெற்றோர் குற்றச்சாட்டு



வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 9 மாத சிசு ஒன்று மரணமடைந்துள்ளதுடன், வைத்தியசாலையின் தவறே குழந்தையின் இறப்புக்குக் காரணம் எனப் பெற்றோர் குற்றம்சாட்டியுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா, தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பம் ஒன்றின் 9 மாதக் குழந்தைக்கு சுகவீனம் ஏற்பட்ட நிலையில் திங்கள் இரவு வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இதன்போது குழந்தையை கொவிட் விடுதிக்கு கொண்டு சேர்த்து பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மேற்படி குழந்தைக்கு கொவிட் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் 5 ஆம் விடுதியில் சேர்த்து சிகிச்சையளித்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை காலை வரை பெற்றோருடன் கதைத்த குழந்தையின் உடலில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டதுடன், குழந்தை மரணமடைந்துள்ளது.

குழந்தையின் மரணத்துக்கு வைத்தியசாலையின் தவறே காரணம் எனத் தெரிவித்து பெற்றோர் வைத்தியசாலை விடுதியில் முரண்பட்ட நிலையில் பொலிஸார் அவர்களை வெளியேற்றியிருந்தனர்.

இந்நிலையில் தமது குழந்தையின் மரணத்துக்கு நீதி வேண்டும் என வவுனியா பொலிஸில் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளமையுடன், வைத்தியசாலை நிர்வாகத்திடமும் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த டினோஜன் அக்சயன் என்ற 9 மாதக் குழந்தையே உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் பாதிக்கப்பட்ட பெற்றோருடன் கலந்துரையாடியமையுடன், குழந்தையின் மரணம் தொடர்பாக உரிய விசாரணைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

# சுவிஸ் வங்கியில் வைப்பு செய்துள்ள இலங்கையர்!

*உலகில் மிகப்பெரிய தனியார் வங்கியான சுவிஸர்லாந்தின் வங்கியில் வைப்புச் செய்துள்ள இலங்கையர்கள் உட்பட உலகம் முழுவதும் பல நாடுகளைச் சேர்ந்த பாரதூரமான குற்றங்களுடன் தொடர்புடைய வாடிக்கையாளர்கள் பலரது தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*சித்திரவதை, போதைப்பொருள் கடத்தல், பணமோசடி, ஊழல் மற்றும் ஏனைய கடுமையான குற்றங்களில் தொடர்புள்ள வாடிக்கையாளர்களின் மறைமுகமான செல்வத்தை அந்த வங்கி கசிய விட்டுள்ளது.*

*இதனடிப்படையில், 10 ஆயிரம் கோடி சுவிஸ் பிராங்குகளுக்கும் அதிகமான பணம் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளன என பிரித்தானியாவில் வெளியாகும் பத்திரிகை தெரிவித்துள்ளது.*

*இதன் மதிப்பு இலங்கை ரூபாவின் பெறுமதியில் 22 லட்சத்து 8 ஆயிரம் கோடி ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.*

*இந்தத் தகவல் வெளியீட்டின் மூலம் உலகம் முழுவதும் உள்ள சித்திரவதைகளுக்கு உட்படுத்தும், போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடும், பண சுத்திகரிப்பில் ஈடுபடும் மற்றும் ஏனைய பாரதூரமான குற்றங்களுடன் தொடர்புடைய 30 ஆயிரம் பேர், சுவிஸ் வங்கியில் வைப்புச் செய்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.*

*உலகில் உள்ள 120 நாடுகளைச் சேர்ந்த நபர்கள் சுவிஸர்லாந்தின் இந்த வங்கியில் வைப்புச் செய்துள்ளனர்.*

*இவர்களில் பிலிப்பைன்ஸின் மனித கடத்தல்காரர், லஞ்சம் வாங்கியதற்காக சிறையில் அடைக்கப்பட்ட ஹொங்கொங் பங்குச் சந்தை வர்த்தகர், லெபனான் பொப் நட்சத்திரம் காதலியைக் கொலை செய்ய உத்தரவிட்ட கோடீஸ்வரர் மற்றும் வெனிசுலாவின் அரச எண்ணெய் நிறுவனத்தை கொள்ளையிட்ட நிர்வாகிகள் மற்றும் எகிப்து முதல் உக்ரைன் வரை ஊழல் அரசியல்வாதிகள் ஆகியோர் அடங்குகின்றனர்.*

*தகவல்களில் இலங்கையைச் சேர்ந்த வாடிக்கையாளர்கள் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் செய்தியுடன் வெளியிடப்பட்டுள்ள உலக வரைபடத்தில் இலங்கையும் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளமை முக்கியமானது.*

*எனினும் இலங்கையைச் சேர்ந்த நபர்களது பெயர் விவரங்களை பிரித்தானிய பத்திரிகை வெளியிடவில்லை.*

*இவ்வாறு தகவல் வெளியிடப்பட்டுள்ள சில வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1940 ஆம் ஆண்டு வரை நீண்டு செல்கிறது. எனினும் வெளியிடப்பட்டுள்ள மொத்த வங்கிக் கணக்கில் மூன்றில் இரண்டு வங்கிக் கணக்குகள் 2000 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆரம்பிக்கப்பட்டவை எனத் தெரியவந்துள்ளது.*



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 290

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**731.உரிமைக்கான அரசியல், இணைந்த அரசியல், இணக்கமான அரசியல் எனப் பலவற்றைத் தமிழ் மக்கள் கேட்டுக் கேட்டு அலுத்து விட்டார்களே? ஆயின் எந்தப் பக்கத்தில் போனாலும் மூடிய கதவுகளையும், முட்டுக்கட்டைகளையும்தானே சந்திக்கின்றார்கள்?**

இது புரிந்து கொள்ளக் கூடியதே. ஆனால், இந்த நிலைமையை மக்கள்



உணர்ந்து கொண்டு தங்களது தேவை எது என்பதை முதலில் வரையறை செய்து, அதற்கேற்ப திட்டங்களையும் அரசியலையும் நடத்த வேண்டும். அதற்கமைவாகத் தங்களது கடமைகளையும் ஆக்கப் பணிகளையும் செய்ய வேண்டும். தமிழ் மக்களின் விகிதாசார சமனுக்கு மேலதிகமான எண்ணிக்கையில் விடுத



லைக் குழுக்கள் இயங்கின. பின்னர் மக்களின் பங்குபற்றலின்றியே அவை மோதிக் கொண்டு, பின் ஏகோபித்த தலைமை ஒன்று உருவானது. அதே தோரணையில் இன்று விகிதாசாரத்துக்கு மேலாக அரசியல் கட்சிகள் இருக்கின்றன. ஏதோ தருமத்துக்கு பிச்சை போடுவோம் என்று கோவிலுக்கு போகும் தர்மவான், அடிபட்டுக் கொண்டு நீட்டப்படும் கரங்களின் தொகையை கண்டு, உங்கள் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது என உண்டியலிலே போட்டு விட்டு தருமம் தேடும் கதைகள் ஏராளம். இதுதான் தமிழ் மக்களுக்கும் நடக்கின்றது.

தங்களது பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை நெருக்கடி நிதர்சனமானது என்று அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் புதியவை இவற்றைத் தூர்ந்து விட வைக்கும் என்பதை ஒத்துகொள்ள விரும்புவதும் இல்லை.

தமிழ் மக்கள் தொடர்ந்து வாழ வேண்டிய சூழல்களையும் யதார்த்தங்களையும் அறிகிறார்கள், போர் முடிந்த காலம் தொட்டு அவர்களது சமூக, பொருளாதாரமற்ற அவர்களின் இருப்பு, ஆற்றல், மதிப்பு என்பன எந்தளவில் நாட்டிலோ, பிராந்தியத்திலோ, சர்வதேசத்திலோ, நடத்தப்பட்ட அரசியலால் மேம்படுத்தப்பட்டுள்ளன என்பவற்றையும் அனுபவங்களின் ஊடாக கண்டு கொண்டுள்ளார்கள்.

புலம்பெயர் சமூகத்தில் கூட மனோபாவங்களில் வித்தியாசங்களில்லை. ஆனால் அவர்கள் தங்களின் இலக்குகளை அடையும் உறுதியும் திண்மையும் கொண்டு அரைத்த மாவையே அரைக்காமல், மாற்றாக யதார்த்தமான வழிகளைச் சிந்திக்க வேண்டும். அவை அரசியல்வாதிகளையே கொண்ட தலைமைகளின்றி சமூக, விடுதலை உணர்வுள்ள கட்டமைப்புக்களின் உருவாக்கத்தில் எழவேண்டும்.

இலங்கையின் பெரும்பான்மையினர், எந்த கட்சியானாலும், காலம் காலமாகத் தமிழின அழிப்புக்கான திட்டங்களை மிகவும் நேர்த்தியாக, ஆறுதலாக, ஆமைவேகத்தில், தங்களது கட்டமைப்புக்கள் தரும் புத்திமதிகளில் மிக நுட்பமாக, நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்களின் மேல் மிளகாய் அரைத்து, அவர்களது அசிரத்தை காரணமாக சர்வதேசத்தையும் முட்டாள்களாக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

இதனை சர்வதேசம் உணர்ந்து கொண்டாலும், தமிழ் மக்களின் சில தரப்புகளே, அவர்களில் அதீத நம்பிக்கை வைத்து பரணி பாடும் போது, தர்மக் காசை சர்வதேசம் கோவில் உண்டியலில் தான் போட்டுவிட்டு போகின்றது.

தமிழ் மக்களோ, சமஷ்டி, சுயாட்சி, சுயநிர்ணயம் என்று கோஷங்கள் போட்டு, கொடிகள் பிடிக்கிறார்களே தவிர, அத்திபாரங்கள் அவர்களது காலடியிலேயே அழிக்கப்படுகின்றன என்பதை உணருவது இல்லை.

1978இல் ஆணித்தரமாக்கப்பட்ட ஒற்றையாட்சி முறையை ஸ்ரீலங்கா விட்டுக் கொடுக்க தயாரில்லை. இந்தச் சிங்களப் பேரினவாதத்துடனேயே ராஜீவ் காந்தி, 1986இல் மல்லுக்கட்டி கடைசியாக தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என்றும், மாகாண சபைகள் என்றும் ஏற்றுக் கொள்ளவும் வைக்க



முடிந்தது. தமிழ் மக்கள் இந்தியாவுக்கு எதிராக நடத்திய போரும், அதனை தொடர்ந்த அரசியலும் சிங்கள பேரினவாதத்துக்கு அவற்றை நடைமுறைப் படுத்த வேண்டிய அழுத்தங்களைத் தரவில்லை. அந்த அழுத்தங்களிலிருந்து விடுபட்டு, ஸ்ரீலங்கா அரசுகள், திட்டமிட்ட முறையில் சமஷ்டி, சுயநிர்ணய உரிமை என்பவற்றைத் தமிழ் மக்களிடையே இருந்து அப்புறப்படுத்தியே வந்தனர். அவற்றை விளங்கி கொள்ள வேண்டும்.

**732.மாகாண சபை முறைகள், இருந்தால் ராஜபக்ஷக்களின் 'ஒரு நாடு; ஒரே சட்டம்' என்பது ஏன் நடைமுறைப்படுத்த வழியில்லை?**

13ஆவது திருத்தமும், மாகாண சபைகளின் அமுலாக்கம் பற்றிய சரத்துக்களும் தரும் சட்ட அடிப்படைகளில் மாகாண சபைகள் தங்களுக்கு ஏதுவானவை அல்ல என மத்திய அரசினால் ஆக்கப்பட்ட சில சட்டங்களை ஒதுக்கி வைத்து, அவை தொடர்பில் அந்தந்த மாகாண சபைகளே, தங்களது வாழ்வியலுக்கு ஏற்றமாதிரி சட்டங்கள் அமைத்து நிர்வகிக்கலாம். அப்படியான மாகாண சபைச் சட்டங்கள் அமுலில் இருக்கும் போது மத்திய அரசின் சட்டங்கள் அந்த



மாகாணத்தில் அதிகாரம் செலுத்த முடியாது. இவை காணி, பொலிஸ், பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் என மாகாண சபைகளுக்காக ஒதுக்கப்பட்ட எல்லா நிரல்களுக்கும் பொருந்தும். மாகாண சபை இயற்றும் சட்டங்களை, மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் அதனை நீதித்துறைக்குச் சமர்ப்பித்து தீர்வுகள் காண மாகாண முறைமைகளில் இடம் உண்டு.

அப்படியான வரைமுறைகள் மாகாண சபை அமைப்புகளில் இருப்பதனால் தான், ராஜபக்ஷக்கள் அதன் அடிப்படையில் முழுமையான ஒற்றையாட்சி நடைபெற வழியிலலை என்றும், 'ஒரு நாடு; ஒரே சட்டம்' அமுல்படுத்துவதும் இயலாது எனவும் கணித்து, 13ஆவது திருத்தத்தை விலத்தி, புதிய அரசமைப்பை அமைத்து கொள்ள பௌத்த பெரும்பான்மையைத் தூண்டுகின்றார்கள்.



ராஜபக்ஷக்களுக்கு இன்றுள்ள அதிகார சரிவிலும் நாட்டின் பொருளாதார நெருக்கடியிலும் தாம் போரை வென்றதில், சாதிக்க வேண்டியதை சாதிப்பதானால் தங்களது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள, பெரும்பான்மையினருக்கு அதனை முன்னேற்றி கொடுத்து தம்மை தவிர வேறு எவராலும் அதனைச் சாதிக்க முடியாது என்று நிரூபிக்க வேண்டும் எனும் நிலைமை உருவாகியுள்ளது.

சர்வதேச ரீதியில் அது அவர்களுக்கு ஒரு விஷப்பரிட்சை. ஏனெனில் 13ஆம் திருத்தம் ஆக்கப்பட்ட, ஒப்பந்தத்தின் சரத்துக்களை அவர்கள் மீறுகிறார்கள். அது இந்தியாவுடனான சர்வதேச ஒப்பந்தம்.

இந்தியாவை பகைக்க விரும்பமாட்டார்கள். சில சமயம், வினை தேடுவதாகவும். அது முடியலாம். சில சமயங்களில் அழிவுக்கு முன் வரும் உன்மத்தங்கள் அவற்றைக் கணக்கெடுப்பதில்லை.

இங்கு புத்திசாதுரியமும், யதார்த்தமும் கொண்டு தமிழ் மக்கள் செயற்பட்டு மாகாண சபை முறைகளைத் தக்க வைக்க வேண்டும். 'ஒரு நாடு; ஒரே சட்டத்திற்கான' வழிமுறைகளை எதிர்க்கட்சிகளோடும், மற்ற இனங்களோடும், மற்ற சிறு பான்மையினரோடும் சேர்ந்து எதிர்த்தபடி, மாகாண சபை முறைகளைத் தக்க வைத்து கொண்டு, அவற்றின் அமுலாக்கத்திற்கான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

நாட்டு மக்களுக்காக, அரசாங்கத்தின் மந்திரிகள் ஐ.நா. மனித உரிமை மன்றைப் பற்றி வீராப்புகள் பேசினாலும், 13ஆம் திருத்தம் மன்றின் தீர்மானங்களில் உள்ளக்கப்பட்டு விட்டதால் அவை மேலும் பலமாக உருவாகாமல் இருப்பதற்கு ராஜபக்ஷக்கள் மந்திரி பீரிஸையும், அலி சப்றியையும் மார்ச் 22 அமர்வுக்கு அனுப்புகின்றார்கள்.

தமிழ் மக்களது சமர்ப்பணங்களும் கோரிக்கைகளும் அதில் கவனம் செலுத்தி அழுத்தங்கள் தர வேண்டுமே ஒழிய, தாங்கள் எதிர்கொள்ளும் தங்களது அரசியல் போட்டிகளை சமாளிப்பதற்கான தாளிப்புகள் செய்ய முற்படுவனவாக இருக்கக் கூடாது.

(வளரும்)

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொருளாதார நெருக்கடி நிலைமையில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளோம் எனவும், பயங்கரவாதத் தடை சட்டமானது வடக்கு, கிழக்கு மக்களுக்கு மட்டுமல்ல முழு நாட்டுக்கும் பாதிப்பு என்பதை இன்று மக்கள் உணர்ந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு பிரேரணையில் உரையாற்றும்போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்னால் இரகசியக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகின்றன என்று இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கடந்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரின்போது தெரிவித்திருந்தார். ஆனால், அன்றைய கூட்டம் நடத்தப்பட ஒரு மணித்தியாலத்துக்கு முன்னரும் உங்களுடன் நான் உரையாடி உங்களையும் அந்தக் கூட்டத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்தேன். ஆனால், நீங்கள் அதில் கலந்துகொள்ளவில்லை. அன்றைய கூட்டத்துக்கு அரசில் சில உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். குறிப்பாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண கலந்துகொண்டமையுடன், அன்றைய கூட்டத்தின் அறிக்கையிலும் கையெழுத்திட்டிருந்தார். மேலும் இரு அரச தரப்பு உறுப்பினர்களும் அந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர். மூடிய அறையில் நடத்தப்படும் கூட்டம் இரகசியக் கூட்டமாகாது.

அதேபோல், இன்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக நாம் முன்னெடுக்கும் போராட்டத்தையும் வேறு உட்கருத்துக்கள் இருக்கும் என்று விமர்சிக்கின்றீர்கள். இச் சட்டத்தை மீள்திருத்தம் செய்ய வேண்டும் என்ற கருத்து நல்லாட்சியில் எழுந்த வேளையில் ஆளுந் தரப்பு உறுப்பினர்கள் குழுக்கூட்டங்களில் கலந்துகொண்டு இதற்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் கூறியுள்ளனர். அதற்கான பதிவுகள் உள்ளன. எனினும், அப்போது பயங்கரவாதத் தடைச் சட்டம் மீள் திருத்தம் செய்யப்படும் வேளையில் அது வேறு காரணிகளில் தாக்கத்தை செலுத்தும் என வேறு தரப்பினர் கூறினர். அவர்களின் கருத்துடன் நாம் இணங்கினோம். எனினும், பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக மீள் திருத்தம் செய்யப்படும் என்ற இணக்கத்துக்கும் நாம் வந்திருந்தோம்.

2018ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் ஆராயப்பட்டு அதில் பல்வேறு திருத்தங்களை மேற்கொள்ள நாம் வலியுறுத்தினோம். பல முரண்பாடுகள், எதிர்மறையான கருத்துக்கள் அந்தச் சட்ட மூலத்திலும் இருந்தன. அப்போது வெளிவிவகாரத்துறை அமைச்சர் திலக் மாரப்பனவிடம் உரையாடியபோது அதில் உள்ள முரண்பாடுகளைத் திருத்துவதாக அவர் எமக்கு வாக்குறுதியளித்தார். எனினும், 2018 ஒக்டோபர் மாதத்தில் அரசியல் சூழ்ச்சி செய்ததன் மூலமாகவும் ஸ்திரமற்ற அரசு ஆட்சியில் இருந்த காரணத்தினாலும், அதன் பின்னரான ஈஸ்டர் குண்டு வெடிப்பு சம்பவங்களை அடுத்தும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றியமைக்க வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகள் நாகரிக சமூகத்தில் இடம் கொடுக்காது என்பதை ஏற்றுக்கொண்டு அதனை மீள் திருத்தம் செய்வதாக இணங்கி, சர்வதேச சமூகத்துக்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் கொடுத்த வாக்குறுதிகளுக்கு அமைய மாற்றுவதாகும் இணக்கம் காணப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டமானது வடக்கு, கிழக்கு மக்களுக்கு மட்டுமல்ல முழு நாட்டுக்கும் பாதிப்பு என்பதை இன்று மக்கள் உணர்ந்துள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றபோது அது குறித்து நாடாளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்ற வேளையில் 2019ஆம் ஆண்டில் அதன் இறுதி அறிக்கை வெளிவந்த நேரத்தில் அதில் ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. அதாவது, இந்தத் தாக்குதல் இடம்பெற்றதன் மூலமாக நாட்டு மக்கள் அனைவருமாக குரல் எழுப்பி ஓர் உறுதியான தலைவருக்கான கோரிக்கையை முன்வைக்கவா என்ற கேள்வி எழுந்தது. தாக்குதல் நடத்தப்பட மூன்று கிழமைக்கு முதல் இருந்தே புலனாய்வுத்துறை அறிக்கை கிடைக்கப்பெற்றும், தாக்குதல் நடத்த ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் அறிவிக்கப்பட்டும், முதல்நாள் பிற்பகல் அறிவிக்கப்பட்டும் அதனைத் தடுக்க ஒரு நகர்வினையேனும் முன்னெடுக்கவில்லை. இந்தத் திட்டத்துக்கு ஏற்ப குறித்த எவரையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை.

நாட்டின் பொருளாதார நிலைமைகளுக்கு சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென கட்சி உறுப்பினர்கள் கூடிக் கலந்துரையாடிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதனை சபைப்படுத்த விரும்புகின்றேன். அதேபோல் நாம் கூறும் விடயங்களை அரச ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் நாம் வலியுறுத்தவில்லை. என்ன செய்திருக்க வேண்டும் என்பது சகலருக்கும் தெரிந்ததே.

நெருக்கடி நிலைமைகளில் நிதி அமைச்சர் கூறும் விடயங்கள் என்னவென்பதே தெளிவில்லாமல் உள்ளது. ஒரு சில நேர்காணல்களை அவதானித்தோம், அதில் அவர் கூறும் விடயங்களை நினைத்து வெட்கப்படுகின்றோம். மத்திய வங்கி ஆளுநர் கூறும் கருத்துக்களை முற்றிலும் மாறான கருத்துக்களை நிதி அமைச்சர் கூறுகின்றார். நிதி இராஜாங்க அமைச்சர் வேறு கருத்துக்களைக் கூறுகின்றார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி ஒட்டுமொத்த நாட்டையும் பாதித்துள்ளது. நாம் அனைவருமே ஒன்றிணைந்து இந்த நிலைமைக்களில் இருந்து மீள நினைகின்றோம். ஆகவே, ஈஸ்டர் தாக்குதலை வைத்து அரசியல் செய்ததைப் போன்று நாட்டின் பொருளாதார நிலைமைகளை வைத்தும் அரசியல் செய்ய வேண்டாம் என அரசைக் கேட்டுக்கொள்கின்றோம், இந்த நெருக்கடி நிலைமையில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க நாம் தயராகவுள்ளோம் – என்றார்.

---

## மூன்று தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகாலை முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதாகக் கடிதம் மூலம் சிறைச்சாலை பொறுப்பதிகாரிக்கு அறிவித்துள்ளனர்.

இரத்தினசிங்கம் கமலாகரன், வைத்தியலிங்கம் நிர்மலன் மற்றும் பத்மநாதன் ஜங்கரன் ஆகியோரே இவ்வாறு உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கரும்புலிகள் தினத்தை நினைவுகூர முயன்றமை மற்றும் தீய செயல்களைச் ஏற்படுத்தும் பொருட்டு வெடிபொருள் தயாரிப்புக்கு உதவியமை போன்ற குற்றச் சாட்டில் இரத்தினசிங்கம் கமலாகரன், வைத்தியலிங்கம் நிர்மலன், நல்லதம்பி நகுலேஸ்வரி மற்றும் பத்மநாதன் ஜங்கரன் ஆகியோர் கடந்த 2020 ஆம் ஆண்டு 07 ஆம் மாதம் 3 மற்றும் 06ஆம் திகதிகளிலும், 2 ஆயிரத்து 21ஆம் 5 ஆம் மாதம் 28 ஆம் திகதியிலும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை, குறித்த சிறைக் கைதிகளின் உறவினர்கள் கைதிகளுக்கு ஆதரவாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் நேற்றுக் காலை முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

மனிதாபிமான அடிப்படையில் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும், பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# சிங்கள, தமிழ் ஊடகவியலாளர்கள் இடையில் புரிதலுடனான உறவை வளர்த்தவர் லியனராச்சி!



இலங்கைத்தீவில் ஊடகத்துறையில் பணியாற்றுவதென்பது மிகக் கடினமானது. பல வழிகளிலும் உயர்வைத் தரும் தொழில் என்று எவரும் கருதலாம். அந்த உயர்வுக்குப் பின்னால் துயரங்கள், வலிகள் நிறைந்திருக்கும். இவ்வாறான பின்புலத்தைக் கொண்ட குறிப்பிட்டுக் கூறக்கூடிய சிலரை மாத்திரமே இலங்கை ஊடகத்துறையில் அடையாளப்படுத்த முடியும். இந்தவொரு நிலையில் சிங்கள - தமிழ் ஊடகவியலாளர்களிடையே புரிதலுடன் கூடிய உறவை வளர்க்கும் சிங்கள ஊடகவியலாளர்கள் என்பது கைவிரல்விட்டு எண்ணக்கூடிய அளவி லேயே உண்டு. அதுவும் தமிழ் - முஸ்லிம் மக்களின் அரசியல் உணர்வுக்கு மதிப்பளிக்கக்கூடிய சிங்கள ஊடகவியலாளர்கள் ஓரிருவரையே கைவிரல் நீட்டிக்காண்பிக்கலாம். அவ்வாறான ஊடகவியலாளர்களில் ஒருவர்தான் கமல்லியனராச்சி. அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீரெனக் காலமாகிவிட்டார்.

இலங்கைத்தீவின் மேல் மாகாணத்தில் உள்ள களுத்துறை மாவட்டத்தில் பிறந்தவர். கொழும்பு -07 இல் உள்ள தேஸ்ரன் கல்லூரியின் பழைய மாணவர். கொழும்பு ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வணிகப் பட்டதாரி.

ஊடகத் துறையைத் தொழிலாகத் தேர்ந்தெடுத்துப் பல சவால்களை எதிர்கொண்டு தன்னளவில் முன்னேற்றம் கண்ட ஒருவர்.

மரணிக்கும் வரை இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதித் தலைவராகக் கடமையாற்றினார். கமல்லியனராச்சியின் திடீர் மறைவு, சிங்கள தமிழ் ஊடகத்துறைக்குப் பேரிழப்பாகும்.

கமல்லியனராச்சி, லக்பிம என்ற சிங்கள நாளிதழில் மூத்த செய்தியாளராகக் கடமையாற்றியிருந்தார். நீதி என்ற சிங்கள வார இதழ் மூலம் ஊடகத் துறைக்குள் கால்பதித்திருந்தார். சுமார் முப்பது ஆண்டுகால ஊடகத்துறை அனுபவமுடைய இவர், ஆங்கில மொழியிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர்.

ஊடகத்துறையில் பல அனுபவங்களைப் பெற்று, 2006 ஆம் ஆண்டு முதல் இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் சிங்கள மொழிப் பிரிவுப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியிருந்தார்.

பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பதவி வகித்துப் பின்னர் முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதித் தலைவராகவும் பதவியுயர்வு பெற்று ஞாயிற்றுக்கிழமை மாலை மரணிக்கும்வரை பணியாற்றியிருந்தார்.

ஊடக வளவாளராகவும் கடமையாற்றிய கமல்லியனாராச்சி, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை உருவாக்குவதற்கான கலந்துரையாடல்களை நடத்தியதுடன், அது தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களையும் பெற்று ஆவணப்படுத்தியிருந்தார். அவற்றை அரசியல் பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்வதிலும் முன் நின்று செயற்பட்ட ஒருவர்.

2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைமுறைக்கு வந்த தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றிய விரிவுரைகளை நடத்தியிருந்தார். ஊடகவியலாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் அந்தச் சட்டம் பற்றிய விரிவுரைகளைத் தொடர்ச்சியாக நடத்தி வந்தார்.

செய்தியாளராகவும், ஊடக வளவாளராகவும் அவர் பணியாற்றிய காலங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தார். அவற்றைத் துணிவுடன் எதிர்கொண்டார். ஊடகத்துறைக்கு அச்சுறுத்தலான காலத்திலும்கூட அவர், நாட்டை விட்டு வெளிநாடு செல்லவில்லை.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஊடகத்துறை முன்னேற்றத்துக்கான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த கமல் லியனராச்சி, போர்க் காலங்களில் தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தொடர்பான பல விழிப்புணர்வுக் கூட்டங்களையும் நடத்தியிருந்தார்.

அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் தமிழ் ஊடகவியலாளர்கள் குறித்த விவரங்களைப் பெற்று, சம்பந்தப்பட்ட பாதுகாப்பை வழங்குவதில் முன்நின்று செயற்பட்டவர்.

குறிப்பாகப் போர்க் காலங்களில் சிங்கள - தமிழ் ஊடகத்துறையில் முரண்பாடுகள் எழுந்திருந்த பல சந்தர்ப்பங்களில், நிதானமாகச் செயற்படும் கமல் லியனாராச்சி, தேவைப்படும்போது வார்த்தைகளை அளந்து பேசுவார்.

பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டும்போது தர்க்கரீதியாகவும், கூர்மையாகவும் தன் கருத்துக்களை முன்வைத்து, நியாயங்களை வெளிப்படுத் துவார்.

இதனாலேயே தமிழ் ஊடகத்துறையினர் கமல்லியனாராச்சியோடு நெருங்கிப் பழகியிருந்தனர். சிங்கள, தமிழ் நாளிதழ்களுக்கு எதிராகப் பதிவு செய்யப்படும் முறைப்பாடுகளை நிதானமாக அணுகிப் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்கும் பண்பும், குறித்த நாளிதழ் ஆசிரியர்களோடு உறவைப் பேணும் முறையும் அற்புதமா னவை.

ஒரு செய்தியாளனுக்கு இருக்க வேண்டிய பொறுமை, நிதானம், சகிப்புத் தன்மை கமல் லியன ராட்சியிடம் தாராளமாகவே இருந்தது.

போரின் பின்னரான சூழலில் சிங்கள, தமிழ் ஊடகத்துறைக்குள் இணக்கப்பாட்டையும் சரியான புரிதலையும் ஏற்படுத்தும் நோக்கில் நேரடியாகவும், மறைமகமாகவும் பல உரையாடல்களை நடத்திக் கொண்டிருந்த கமல்லியனாராச்சியின் திடீர்மறைவு, ஈடுசெய்ய முடியாதது.

- அ.நிக்ஸன் -

---

## பஸில் நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்து பெறப்படவுள்ள கடன் தொடர்பான பேச்சுகளை இறுதிப்படுத்தும் நோக்கிலேயே அவர்கள் அங்கு செல்கின்றனர்.

இதற்கு முன்னரும் பஸில் இந்தியா சென்று, அந்நாட்டின் நிதி அமைச்சர் உள்ளிட்ட பிரமுகர்களுடன் பேச்சு நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரு படகில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் இன்று அதிகாலை மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்களை யாழ்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் இன்று ஒப்படைக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# டெங்கு தடுப்புச் செயலணியின் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க சாணக்கியன் வலியுறுத்து



டெங்கு தடுப்புச் செயலணியின் பணியாளர்களுக்கு ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் ஊடாக நிரந்தர நியமனத்தை வழங்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்துக்காக நியமிக்கப்பட்ட செயலணியில் உள்ள இளைஞர் - யுவதிகள், சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை தொடர்பாக ஆளும் தரப்பு உறுப்பினர்களில் ஒருவர் கூட ஒரு வார்த்தையையேனும் பேசவில்லை. இதனையிட்டு நாம் மிகவும் கவலையடைகிறோம்.

உண்மையில் இந்த செயலணி 2018 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டபோது ஒரு லட்சம் பேரில் 238 பேருக்கு டெங்கு நோய் கண்டறியப்பட்டது. 2023 ஆம் ஆண்டாகும்போது ஒரு லட்சம் பேரில் 100 பேரளவில் டெங்கு நோயாளர் எண்ணிக்கையைக் குறைப்பதே இதன் நோக்கமாகவும் இருந்தது.

கொழும்பு, களுத்துறை மாவட்டங்களில் டெங்கு நோயெதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டவர்கள், இன்று மிகவும் கவலையுடனேயே தங்களின் கடமைகளைச் செய்து வருகின்றனர்.

எனினும், அவர்கள் மாவட்ட ரீதியாகத் தங்களின் கடமைகளை சரியாகவும் எந்தவொரு சிக்கலுமின்றி மேற்கொண்டே, தங்களுக்கு நிரந்தர நியமனத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோருகிறார்கள்.

கடந்த 2 வாரங்களுக்கு முன்னர், இவர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டபோது இரவு முழுவதும் அவர்கள் சுகாதார அமைச்சில் இருந்து, தங்களுக்குச் சார்பான பதில் ஒன்று வரும் என்று எதிர்பார்த்தார்கள்.

2021 ஆம் ஆண்டும் இவர்கள், முன்னாள் சுகாதார அமைச்சரைச் சந்தித்து இதுதொடர்பான கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்கள்.

அமைச்சர் அன்று வழங்கிய உறுதி மொழியை நம்பித்தான் அவர்கள் தங்களின் கடமைகளையும் சரியாக செய்தார்கள்.

கொரோனா பரவ ஆரம்பித்த காலத்தில் பி.பி.டி. கிட் கூட இல்லாமல், தங்களின் உயிரை பணயம் வைத்துத்தான், 20 ஆயிரம் ரூபா சம்பளத்துக்கு அவர்கள் வேலை செய்திருந்தார்கள்.

இன்றும் அவர்கள் அதே சம்பளத்தில்தான் வேலை செய்கிறார்கள்.

அவர்களில் 1,169 பேர் 8 ஆம் தரக் கல்வித் தகைமையுடனும், 322 பேர் சாதாரணதரக் கல்வித் தகைமையுடனும் இன்று இதில் கடமையாற்றி வருகிறார்கள்.

இவர்கள் தொடர்பாக அமைச்சர் கவனம் செலுத்தி, இவர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்திலேனும் இவர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டிருந்தால், அவர்கள் இன்னமும் ஊக்கமாக வேலை செய்யக்கூடியதாக இருக்கும். இன்று ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக நூற்றுக்கணக்கானோர் நியமனத்தைப் பெற்றுள்ளார்கள். அவர்கள் லட்சக்கணக்கில் இலஞ்சம் கொடுத்து, நியமனத்தைப் பெற்று விட்டு, இன்று வேலை செய்யாமல் வீட்டில் இருக்கிறார்கள். நோய்கள் என்பவை முடிந்துவிடும் விவகாரமல்ல. டெங்கு நோய் ஒழிந்த பிறகு இன்னுமொரு நோய் புதிதாக உருவாகலாம்.

எனவே, டெங்கு தடுப்புச் செயலணியின் பணியாளர்களுக்கு ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் ஊடாக நிரந்தர நியமனத்தை வழங்க வேண்டும் என்று நாம் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம். - எனத் தெரிவித்துள்ளார்.

# சேதனப்பசளை விவசாயத்தை ஊக்குவிக்க 100 கோடி ரூபா!

## கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா தகவல்

கிழக்கு மாகாணத்தில் சேதனப்பசளை விவசாயத்தை ஊக்குவிக்க, 100 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கிரான் ரெஜி கலாசார மண்டபத்தில் நடைபெற்ற சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் இதனைத்தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் பசுமை விவசாயத்தை ஊக்குவிக்கும் முகமாக ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்துக்கு அமைவாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், அவர் மேலும் கூறுகையில் -

'எதிர்காலத்தில் சேதனப் பயிர் உற்பத்தியை மேற்கொண்டு அதன் தரத்தைப் பரிசோதனை செய்வதற்கு இரசாயன ஆய்வு கூடங்களை கிழக்கு மாகாணத்தில் 3 மாவட்டங்களிலும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

அதன் மூலம் விவசாயிகள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு சர்வதேச ரீதியான அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்களை வழங்கவுள்ளோம். இந்த நடவடிக்கைக்காக 100 கோடி ரூபா நிதி 3 மாவட்டங்களுக்கும் வழங்குவதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்த நிதி கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது.

விவசாயிகள் தங்களது மண்ணின் தரம் மற்றும் சேதனப்பசளையின் தரத்தை உறுதி செய்ய ஆய்வு கூடங்கள் நிறுவப்படவுள்ளன. - என கூறினார்.

இரசாயான பசளைப் பாவனையின்றி சேதனப் பசளையைப் பயன்படுத்தி விவசாயம் மற்றும் சிறு தோட்டப் பயிர்ச் செய்கை மூலம் சாதனை படைத்த விவசாயிகள் மற்றும் நிறுவனங்களை சார்ந்த நிர்வாகிகளும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கு காசோலையும் சிறந்த விவாசாயி என்ற நினைவுச் சின்னங்களும் ஆளுநரால் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு ஒத்துழைப்புகள் தொடர்ந்தும் வழங்கப்படும்



## துருக்கித் தூதுவர் தெரிவிப்பு

*இலங்கை மற்றும் மாலைதீவுக்கான துருக்கி தூதுவர் ரகிபே டிமெட் செகொர்சியோக்லு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர இடையில் இருதரப்பு சந்திப்பு அண்மையில் அமைச்சில் இடம்பெற்றது.*

*இதன் போது இலங்கை மற்றும் துருக்கிக்கு இடையிலான தொடர்ந்து நிலவும் வரலாற்று மற்றும் கலாசார உறவுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதோடு இரு நாடுகளுக்கும் இடை யில் நட்பு மற்றும் நல்லுறவை வலுப்படுத்தும் திட்டங்களோடு அவை பயன்பெறும் வகையில் பொருளாதார விவகாரங்கள் பாதுகாப்பு மற்றும் அரசியல் ஒத்துழைப்புகள் மேலும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் தொடர்பாகவும் அமைச்சர் மற்றும் தூதுவர்களுக்கு இடையில் இதன் போது கலந்துரையாடப்பட்டது.*

*இலங்கையின் வளர்ச்சி மற்றும் அதனை மேம்படுத்துவதற்கு துருக்கி அரசாங்கம் தொடர்ச்சியான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாகவும் துருக்கி தூதுவர் இதன் போது தெரிவித்தார்.*

*கடந்த காலங்களில் நிலவிய இருதரப்பு ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கான சந்திப்பாக இது அமைவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.*

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு கடன் வழங்கத் தடைபோடவில்லை!

## மத்தியவங்கி ஆளுநர் தெரிவிப்பு



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு கடன் வழங்குவதை நிறுத்துமாறு வங்கிகளுக்கு உத்தரவிடவில்லை. மாறாக கடன் வழங்கலின் போது பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள கடன் எல்லையை மீற வேண்டாம் என்று மாத்திரமே அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு கடன் வழங்குவதை நிறுத்துமாறு மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நாட்டிலுள்ள அனைத்து அரச மற்றும் தனியார் வங்கிகளுக்கும் உத்தரவிட்டிருக்கிறார் என செய்திகள் வெளியாகியிருந்தன.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குத் தொடர்ச்சியாகக் கடன் வழங்கப்பட்டுவருவதன் விளைவாக எதிர்வரும் காலங்களில் அரச வங்கி கட்டமைப்பால் உரியவாறு இயங்க முடியாமல் போகக்கூடும் என்றும் சில வேளைகளில் அந்தக் கட்டமைப்பு முழுமையாக சீர்குலைவடையும் என்றும் மத்திய வங்கி ஆளுநர் அரசாங்கத்தை எச்சரித்திருக்கிறார் எனவும் அந்தச் செய்திகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

மேலும் அதன் காரணமாக அரச வங்கிக்கட்டமைப்பு சீர்குலையும் பட்சத்தில், அதற்கான பொறுப்பைத் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அஜித் நிவாட் கப்ரால் அரசாங்கத்துக்கு அறிவித்திருக்கிறார் எனவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும் இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ள மத்திய வங்கியின் ஆளுநர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு கடன் வழங்குவதை முழுமையாக நிறுத்துமாறு வங்கிகளுக்கு உத்தரவிடப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.02.2022இல் வெளியிடப்பெற்றது.